# பேதுரு பதிப்பகத்தின் வெளியீடுகள்

புதுமைக் கோணத்தில்
திருக்குறள் ஆய்வில்

ஓர் தொடர் முயற்சி

வெளியீடு
**பேதுரு பதிப்பகம்**
ஶ்ரீ சக்ரா அடுக்ககம்,
17 கிழக்கு வன்னியர் தெரு,
கே.கே.நகர்(மேற்கு), சென்னை-600078.

## வெளியீட்டுக் குறிப்புகள்

பெயர் : பேதுரு பதிப்பகத்தின் வெளியீடுகள்

பொருள் : **நூற்**பட்டியல்

பதிப்பு : அக்டோபர் 2019

எழுத்து : 12 புள்ளிகள்

பக்கங்கள் : 16

தாள் : பாண்ட்

அளவு : 1/8 டெம்மி

அமைப்பு : பேதுரு கணினி, சென்னை-600078.

வெளியீடு : **பேதுரு பதிப்பகம்,**
ஸ்ரீ சக்ர அடுக்ககம், குடியிருப்பு,
17/A கிழக்கு வன்னியர் தெரு,
**கே.கே. நகர் மேற்கு, சென்னை - 600078.**

பேசி : **99402 80288 / 72005 80326**
thanjaimpeter59@gmail.com

விலை : இலவசம்

# உள்ளே

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வள்ளுவத்தின் சீரும் சிறப்பும் | 4 |
| 2. | வள்ளுவத்தின் உயிரும் உறவும் | 6 |
| 3. | வள்ளுவத்தின் சொல் அடைவு | 8 |
| 4. | வள்ளுவமே வாழ்க்கை நெறி(மென்பொருள்) | 9 |
| 5. | விநாயகர் அகவல் - உரைத்திரட்சி | 10 |
| 6. | கல்வி வள்ளல் பச்சையப்பர் பிள்ளைத்தமிழ் | 10 |
| 7. | தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ் | 10 |
| 8. | திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் | 11 |
| 9. | வள்ளலார் பிள்ளைத்தமிழ் | 11 |

பிற வெளியீடு

திருக்குறள் தமிழ்-ஆங்கில விளக்க உரைகள் 12
கண்ணதாசன் பதிப்பகம்

கவிஞரின் வாழ்க்கைக் குறிப்பு 13

# வள்ளுவத்தின் சீரும் சிறப்பும்

**(முதற்பதிப்பு - ஆகஸ்து 2006)**
**2ஆம் பதிப்பு டிசம்பர் 2019 எதிர்பார்க்கலாம்**
***ISBN: 81 - 904308 - 0 - 7***

**ஆக்கம்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்**

**விலை ரூ.300**

முதன்முதலாக . . .

1 திருக்குறள் முழுமையும் அசைபிரித்து, அதற்கான வாய்பாடு போட்டுப் பார்த்து அனைத்துக் குறள் வெண்பாவும் அதற்கான இயச்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் பெற்றிருக்கிறது என்பதைச் செயல் விளக்கம் செய்து காட்டியதன் மூலம் எச்சீரும் தளையும் சிதையாத திருக்குறள் மூலத்தை மீண்டும் உருவாக்கியது.

2 அவ்வாறு நிலைநிறுத்த அசைபிரிக்க இன்றியமையாத இலக்கணக் குறிப்புகள் (குற்றியலிகரம், குற்றியலுகரம் உயிரளபெடை, ஐகாரக்குறுக்கம், ஆய்தக்குறுக்கம் முதலிய இலக்கண விளக்கம் நூற்பா எண்ணுடன்) அதற்காக எடுத்துக்காட்டுடன் நூல்பக்கம் 273ல் கொடுக்கப் பெற்றுள்ளன.

3 வெண்பா இலக்கணம் என்றால் என்ன? எப்படி அசை பிரிப்பது என்பதை 0,1 என்ற குறியீட்டுடன் கொடுத்ததுடன், குழந்தைகளாகவும் கற்பனை செய்து, எளிதில் புரிந்து கொள்ள விளையாட்டு முறையில் விளக்கம் பெற்றுள்ளது. (பக்கம் 279)

4 இந்நூலில் 5 மொழிகளில் (தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், உருது) அவரவர் மொழியின் தன்மைக்கேற்ப, தமிழ்க் கவிதை புனைவதற்கு இலக்கண மரபு இருப்பதையும், அதில் வெண்பா இலக்கணத்திற்கு உட்பட்டுத் திருக்குறள் இருப்பதையும் விளக்கிச் சொல்லப் பெற்றுள்ளது.

5 ‘இந்நேரம் தாங்கள்’ என்ற பகுதியில் இந்நூலைப் பெற்றுப் படிப்பதால் விளையும் பயன்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. (நூல் பக்கம் 320). இந்நூலைப் பயின்ற உடன் குறள் வெண்பா இலக்கணம் அறிந்து, நூலாசிரியரை வாழ்த்தி 10 குறள் வெண்பா எழுதி அளித்தவர் ஆங்கிலப் பேராசிரியர் திரு டயஸ் அவர்கள், லயோலா கல்லூரி, சென்னை.

6 தமிழ் எழுத்துகளின் பட்டியல் ஒன்றைத் தயாரித்து அதில் குறில் எழுத்துகளைக் கறுப்பு நிற எழுத்திலும் நெடில் எழுத்துக்களைச் சிவப்பு நிறத்திலும் கொடுத்து நேர்அசை , நிரைஅசை பிரிக்க ஏதுவாக அமைக்கப்பெற்றுள்ளது.

7 வெண்பா இலக்கணத்தைத் திருக்குறளில் அணிவித்ததன் மூலம், ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற அளவில் எல்லாத் திருக்குறள்களும் சோறு போன்று முதன்முதலில் இந்நூலில்தான் மலரச் செய்யப் பெற்றுள்ளன.

8 இந்நூலின் தனிச் சிறப்பு நூலில் எப்படி உருவாக வேண்டும் என்ற சிந்தனை முடிவு, ஐந்து மொழியில் அந்தந்த மொழியினருக்கான வகையில் வெவ்வேறு எடுத்துக்காட்டுடன் விளக்கியுள்ளமை, 5 மொழியிலும் நூலாசிரியரே தட்டச்சுச் செய்தது, மெய்ப்பு, புத்தக வடிவாக்கம், நூலில் கட்டமைப்பு என அனைத்தும், ஒரு தனிநபர் உழைப்பில் உருவாக்கமான நூல். (இதற்கு எடுத்துக் கொண்ட காலம் சுமார் 5ஆண்டுகள். 2ம் பதிப்பிற்கான மீள்உருவாக்கம் நடைபெற்றுவருகின்றன)

9 செய்யுள் உறுப்புகளின் வரிசையை நினைவில் கொள்ள ஒரு கருத்துப்படத்துடன் அதற்கான கவிதையும் கொடுக்கப்பெற்றுள்ளது. (நூல் பக்கம் 272)

10 திருக்குறளுக்கான ஒரு கொடி அமைக்கப் பெற்று அதற்கு ஒரு விளக்கமும் தரப்பெற்றுள்ளது. (நூல் பக்கம் 268)

11 பிற செய்திகள்: (1) நூலகத்திற்காகத் தமிழக அரசு 1000 பிரதிகளைப் பெற்றது. (2) பள்ளிக்கல்வி இயக்குனரகம் பெற்ற பிரதிகள் 100. (3) எக்கிம்பாதம்ஸ் நூல் விற்பனை நிலையத்தில் பேதுரு பதிப்பக நூல்கள் கிடைக்கும்.

**வள்ளுவத்தின் உயிரும் உறவும்**
**(பதிப்பு ஆண்டு சனவரி 2009)**
**பேதுரு பதிப்பகம், சென்னை**
ISBN: 978-81-904308-1-4
**ஆக்கம்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்**
**விலை ரூ.300**

**முதன்முதலில் ...**

1 தொல்காப்பியப் புணர்ச்சி விதிகளில் 27 (திருக்குறள் மூலத்தை அதாவது புணர்ச்சி விதிகளை முழுமையாகப் பெற்றுள்ள திருக்குறளை விரித்து வாசிக்க இன்றியமையாதது என அடியேன் கருதிய) திருக்குறளில் பயின்று வந்துள்ளமை ஆய்வு செய்யப் பெற்றுள்ளது. நூலின் வலப்பக்கம் தரப்பெற்றுள்ள விரிநிலையை வலது கை வைத்து மறைத்த வண்ணம் இடப்பக்கம் இருக்கும் திருக்குறளைப் படித்துப் பயிற்சி பெற்றால் தமிழர்களின் பெருமைமிக்க சங்க இலக்கியங்களைப் படிக்கவும், புரிந்து கொள்ளவும் வழிவகுக்கும்.

2 தொல்காப்பிய புணர்ச்சி விதிகளின் எண்(அகர வரிசையில்) இதற்கு இணையான நன்னூல் நூற்பா எண்ணும் கண்டறிந்து கொடுக்கப்பெற்றுள்ளது. இந்நூற்பா திருக்குறளில் இடம்பெற்ற சில காட்டுகளுடன் பக்கம் 268இல் விளக்கம் பெற்றுள்ளது.

3 நன்னூல் புணர்ச்சி விதி எண்(அகர வரிசையில்) பக்கம் 278இல் கொடுக்கப் பெற்றுள்ளது.

4 இந்த 27 புணர்ச்சி விதிகளை ஒரே பக்கத்தில் ஒரு அட்டவணையாக பக்கம் 288இல் கொடுக்கப் பெற்றுள்ளது. இந்த முழு நூல் உருவாக்கத்திற்கான விதிகள் அனைத்தும் இந்த ஒரே பக்கத்தில் கொடுக்கப்பெற்றுள்ளது.

5 திருக்குறளை ஏன் சீர்களைப் பிரித்து எழுதக் கூடாது என்பதற்கான என் வேண்டுகோளைப் பக்கம் 290ல் பதிவு செய்து, வகையொலி அல்லது புணர்ச்சி விதிகளை நீக்கி மக்கள் எளிதில் படிக்க வேண்டும் என எண்ணுவோர் அவரவர்

படைக்கும் நூலின் முதல்பக்கத்தில் திருக்குறள் விரிநிலை பயன்படுத்தப் பெற்றுள்ளது எனக் குறிப்பிட வேண்டும் என்ற “என் வேண்டுகோளும்” வைக்கப்பெற்றுள்ளது.

6 பதினெண் மேல்கணக்கு நூற்களான பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களையும் ஒருவர் பயின்றால்தால் திருக்குறளின் ஆழ அகல நுட்பத்தை ஒருவர் மேலும் அறிய முடியும் என்பது இந்நூலாசிரியரின் அவா.

7 “இந்நூலைப்பற்றி” என்னும் தலைப்பில் தமிழ் ஆங்கிலம், இந்தி என மூன்று மொழிகளில் கட்டுரையும் இடம் பெற்றுள்ளது.

8 வழக்கம் போல மொழிப்பெயர்ப்பாக அல்லாமல் மொழிக்கேற்ற தனிநடையில் எண்ணம், எழுத்து, தட்டச்சு, மெய்ப்புப் பார்த்தல் என இந்நூலசிரியரே செய்திருக்கிறார்.

9 திருக்குறளை விரித்து எழுதக்கூடாது என விரும்பும் இந்நூலாசிரியர் எப்படி விரித்து எழுதலாம் என்ற கேள்வி எழலாம். எந்தப் புணர்ச்சி இலக்கண அடிப்படையில் புணர்த்து எழுதப் பெற்றது எனத் தொல்காப்பிய, நன்னூல் நூற்பா எண்ணுடன், எந்த ஒரு எழுத்து இரண்டாகப் பிரிகிறது என பக்கம் 325-408இல் அட்டவணை செய்திருக்கிறாரே (கிட்டத்தட்ட 6000 இடங்கள்) அந்தச் சொற்கள் மட்டுமே தான் விரித்து எழுதியிருப்பதாகக் கூறுகிறார் இந்நூலாசிரியர்.

10 ‘இந்நூலின் நுட்பத்தை அறிந்த பிறகு’ என்ற தலைப்பில் இந்நூலைப் பெற்றுப் படிப்பதால் விளையும் பயன்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. (நூல் பக்கம் 324)

11 அணிந்துரை வழங்கிய பெருமக்கள்

(1) முனைவர் ஔவை நடராசன், முன்னாள் துணைவேந்தர், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், (2) பேரா.ச.ப.தியாகராஜன், துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5. (3) முனைவர் அரங்க இராமலிங்கம், தமிழ்ப்பேராசிரியர், தொலைத்தூரக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை. (4) முனைவர் சி.வெ. சுந்தரம், பொதுச்செயலாளர், சித்தர் ஆய்வு மையம், சென்னை - 78.

**வள்ளுவத்தின் சொல் அடைவு**
**(பதிப்பு ஆண்டு சனவரி - 2009)**
**பேதுரு பதிப்பகம், சென்னை 78.**
ISBN: 978-81-904308-2-1
**ஆக்கம்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்**
**விலை ரூ.100**

1 திருக்குறளில் மேற்கொள்ளப் பெற்ற தொல்காப்பியப் புணர்ச்சி விதிகளைக் கண்டறிந்து ஆய்ந்து, அதே புணர்ச்சி விதிகளின் அடிப்படையில் திருக்குறளின் சீர்களைச் சொற்களாக்கி வள்ளுவத்தின் உயிரும் உறவும் என்ற நூலில் கொடுக்கப்பெற்றதிலிருந்து முதற்சொல் அகர வரிசையை இந்நூலின் முதல் 25 பக்கங்களிலும் திருக்குறளில் இறுதிச்சொல் அகர வரிசையை இந்நூலில் 131 முதல் 142 பக்கங்களிலும், திருக்குறள் 7 சீர்களைக் கொண்டுள்ளதால் அதனை 6 சொற்கள் (கேளா தவர் குறளில் கடைசி 2 சீர் ஆனால் ஒரே வார்த்தை) முதல் 13 சொற்கள் வரை பிரித்து அனைத்துச் சொற்களையும் அகர வரிசையில் 26 முதல் 130 வரையிலான பக்கங்களிலும் இடம் பெற்றுள்ளன.

2 இந்நூலின் அ என தொடங்கும் சொல் முதல் சொல்லாக, இடையில் வரும் சொல்லாக, கடைசொல்லாக தொகுக்கப்பெற்ற நூலின் பக்கத்தை அட்டவணை செய்யப் பெற்றுள்ளது (பக்கம் 143 - 144)

3 அணிந்துரை வழங்கிய பெருமக்கள்: (1) பேராசியர் ச.ப. தியாகராஜன், துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5. (2) முனைவர் அரங்க. இராமலிங்கம், தமிழ்ப்பேராசிரியர், தொலைத்தூரக் கல்வி நிறுவனம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5. (3) முனைவர் சி.வெ. சுந்தரம், பொதுச்செயலாளர், சித்தர் ஆய்வு மையம், சென்னை-600078.

## வள்ளுவமே வாழ்க்கை நெறி

**மென்பொருள் - குறுந்தகடு**

**மே 2005**

**ஆக்கம்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்**

**விலை ரூ.500**

தமிழ் வளர்ச்சிக் கழகம் சென்னை, கனியன் பூங்குன்றன் விருதுக்கு (2005ஆம் ஆண்டு என நினைக்கிறேன்) இந்த மென்பொருள் அனுப்பி வைக்கப் பெற்றது. இதற்கான நேர்காணலில் சற்றேக்குறைய 10 துணைவேந்தர்கள் முன்னிலையில் வெண்திரையில் இந்த மென்பொருளின் செயல் விளக்கம் செய்து காட்டப் பெற்றது.

இந்த மென்பொருள் மூலம்...

1) ஒரு சொல்லைத்தேர்ந்து அச்சொல்லைத் தேடு எனும் பொத்தானை அழுத்துவதன் மூலம் அதே சொல் உள்ள எல்லாத் திருக்குறளும் திரையில் வரும் தாளில் அச்சடித்தும் வரும்

2) புளிமா சீரை தேர்வு செய்து தேடுதலுக்கான மற்றொரு பொத்தானை அழுத்தும்போது முதல் 6 சீரும் புளிமாச் சீராக அமைந்து இருக்கும் (குறள் என் 637, 133, 310) குறள்கள் அதன்பின் முதல் 5சீரும் புளிமாச் சீராக அமைந்த குறள் எனவும், நாள் காசு மலர் பிறப்பு முதலியவற்றில் முடிவுறும் குறள்களையும் தனித்தனியே திரையில் காண இயலும்.

3) அசை பிரித்து வாய்பாடு போட்ட குறளும் திரையில் வரும்.

பரிசு கிடைக்கவில்லை எனினும் பாராட்டுகள் கிடைத்தன.

வாய்ப்பு அளிக்கப் பெற்றால் இந்த மென்பொருள் செயல் விளக்கம் செய்து காட்டப்பெறும்.

## விநாயகர் அகவல்

(உரைத்திரட்சி)

(முதற்பதிப்பு - ஆகஸ்து 2006)

2ஆம் பதிப்பு ஆகஸ்து 2013

*ISBN: 978 - 81 - 904308 - 3 - 8*

நூலாசிரியர்: ஔவையார்

உரையாசிரியர்: முனைவர் சி.வெ. சுந்தரம்

பதிப்பாசிரியர்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்

**விலை ரூ.30**

## கல்வி வள்ளல்
## பச்சையப்பர் பிள்ளைத்தமிழ்

(முதற்பதிப்பு - ஏப்ரல் 2018)

2ஆம் பதிப்பு நவம்பர் 2019ல் எதிர்பார்க்கலாம்

*ISBN: 978 - 81 - 904308 - 4 - 5*

நூலாசிரியர்: திருக்குறள் செம்மல்
முனைவர் வீ. சேதுராமலிங்கம்

உரையாசிரியர்: முனைவர் ரா. சரவணன்

பதிப்பாசிரியர்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்

**விலை ரூ.200**

## தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ்

முதற்பதிப்பு - நவம்பர் 2018

*ISBN: 978- 81 - 904308 - 5 - 2*

நூலாசிரியர்: திருக்குறள் செம்மல்
முனைவர் வீ. சேதுராமலிங்கம்

உரையாசிரியர்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்

**விலை ரூ.200**

## திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ்

முதற்பதிப்பு - ஏப்ரல் 2019
*ISBN: 978 - 81 - 904308 - 6 - 9*
நூலாசிரியர்: திருக்குறள் செம்மல்
முனைவர் வீ. சேதுராமலிங்கம்
உரையாசிரியர்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்

**விலை ரூ.200**

## வள்ளலார் பிள்ளைத்தமிழ்

முதற்பதிப்பு - செப்டம்பர் 2019
*ISBN: 978 - 81 - 904308 - 7 - 6*
நூலாசிரியர்: திருக்குறள் செம்மல்
முனைவர் வீ. சேதுராமலிங்கம்
உரையாசிரியர்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்

**விலை ரூ.200**

## வரவிருக்கும் நூல்கள்

* திருக்குறளில் தீவகம்

** தொல்காப்பியத் துணைவன்


*** திருக்குறளில் வெண்பா வாய்பாடு

**திருக்குறள் தமிழ்-ஆங்கில விளக்க உரைகள்**
**தொகுப்பாசிரியர்: கவிஞர் தஞ்சை ம. பீட்டர்**
**கண்ணதாசன் பதிப்பகம்**
**சனவரி 2017 (முதற்பதிப்பு)**
**சனவரி 2018 (இரண்டாம்பதிப்பு)**
ISBN: **978-81-8402-523-1**

**விலை ரூ.300**

1 திருக்குறளார் வீ.முனுசாமி மற்றும் ஜி.யு.போப் உரைகளைத் தொகுத்து நூல் அமைப்பு, தட்டச்சு, நூல்கட்டமைப்பு, மெய்ப்புப் பார்த்தல் தொகுப்பாசிரியரே செய்திருக்கிறார்.

2 ஜி.யு. போப் உரையில் உள்ள அனைத்து ஆங்கிலச் சொற்களையும் அகர வரிசை செய்து, ஒரு சொல் இருக்கும் எல்லாத் திருக்குறள் எண்களையும் வழங்குவதால் ஆங்கிலத்தில் உரை செய்பவர்கள் கூட இனித் திருக்குறளை மேற்கோள் காட்டவும் சொற்பொழிவைச் சிறப்பானதாக அமைக்கவும் இந்நூல் உதவும்.



## கவிஞரின் வாழ்க்கைக் குறிப்பு

பெயர்:: - **கவிஞர் தஞ்சை ம.பீட்டர்**
உலக அறிமுகம்:: - 22.01.1959 (இன்று 60 அகவை)
பிறந்து வாழ்ந்த இடம்(22ஆண்டுகள்)::
- அருளானந்த நகர், தஞ்சாவூர்.
தமிழ்நாடு.

கல்வித் தகுதி::
- பள்ளிக்கல்வி, தூய அந்தோணியார் மேல்நிலைப்பள்ளி, தஞ்சாவூர். (1977)
- PUC, ராஜா சரபோஜி கல்லூரி, தஞ்சாவூர்.(1978)

புதுதில்லியில் வசித்தபொழுது பெற்ற கல்வி::
-MA (வரலாறு) -அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
-MCA-இந்திராகாந்தி திறந்தநிலைப் பல்கலைக்கழகம்,
-இந்தி: பிரபோத்,பிரவீன்,பிராக்ஞா மத்திய அரசுத்தேர்வு
-உருது: *Certificate Course,* உருது அகாடமி, டெல்லி.

தொழில் நுட்பக்கல்வி::
- *Higher Grade* தமிழ்த்தட்டச்சு, தமிழக அரசுத்தேர்வு
- *Hr. Grade* ஆங்கிலத்தட்டச்சு, தமிழக அரசுத்தேர்வு
- *Lr. Grade* இந்தித்தட்டச்சு, மத்திய அரசுத்தேர்வு

மொழியறிவு+தட்டச்சு::
- தமிழ், ஆங்கிலம், இந்தி, மலையாளம், உருது

பணி விவரம்::
- 5 ஆண்டுகள் அச்சக பணி; தஞ்சைக் கீழ ராஜ வீதியில் சிட்டி பைண்டிங் ஓர்க்ஸை (*City Binding Works)* நடத்தியது.
- நடுவண் அரசின் புத்தக வெளியீட்டுத்துறையில் தமிழ்த் தட்டச்சகராகவும் நூல் மெய்ப்புப் பார்ப்பவராகவும் நிரந்தரப் பணி.
- இரண்டு நடுவண் அமைச்சர்களுக்குத் தமிழ்த் தனி உதவியாளராகப் பணி (*Language PA to MOS*)

- *CE(SZ) for AIR &TV* அலுவலகத்தில் 5 ஆண்டுகள் பணி புரிந்தபோது கணினியைச் செப்பனிடுதல், மென்பொருள் உருவாக்குதல், பராமரித்தல், கணினியைச் சகாக்களுக்குப் பயிற்றுவித்தல் செய்தமை.
- *Regional Training Institute, Min. of Finance, Besant Nagar* -ல் கணினி பயிற்சி அளித்தது
- அகில இந்திய வானொலியிலிருந்து பணி நிறைவு.

அரசுப்பணி அனுபவம்::

- 20ஆண்டுகள் புதுதில்லியில்
- 18 ஆண்டுகள் சென்னையில்

நூல் படைப்புகள்::

1)வள்ளுவத்தின் சீரும் சிறப்பும்(2006)(பேதுரு பதிப்பகம்)
2)வள்ளுவத்தின் உயிரும் உறவும் (2009) ”
3)வள்ளுவத்தின் சொல் அடைவு (2009)

பதிப்பாசிரியர்::

1) விநாயகர் அகவல் (உரைத்திரட்சி) (2008) ”
2) கல்விவள்ளல் பச்சையப்பர் பிள்ளைத்தமிழ்(2018)

உரையாசிரியர்::-

1) தொல்காப்பியர் பிள்ளைத்தமிழ் (நவம்பர் 2018)
2) திருவள்ளுவர் பிள்ளைத்தமிழ் (ஏப்ரல் 2019)
3) வள்ளலார் பிள்ளைத்தமிழ் (செப்டம்பர் 2019)

தொகுப்பாசிரியர்::

1) திருக்குறள் (தமிழ்-ஆங்கில உரை)
கண்ணதாசன் பதிப்பகம் (ஜனவரி 2017&2018)

மென்பொருள்::

1) வள்ளுவமே வாழ்க்கை நெறி (CD) (மே 2005)

மொழியாக்கம்::

**1957** எனும் குல்சாரின் இந்தி கவிதையைத் தமிழில் மொழிபெயர்ப்புச் செய்து திட்டம் பத்திரிக்கைக்குஅளித்தது.

பிற தமிழ்ப்பணிகள்::

- தமிழ் இளைஞர் கலை பண்பாட்டுச் சங்க செயற்குழு உறுப்பினர், புதுதில்லி (1981-2000 TYCA)
- மதிப்புறு தலைவர், நெய்தலங்கானல் பைந்தமிழ்ச் சோலை (மே 2018 வரை நடத்திய சங்க இலக்கிய கூட்டம் 100) (தற்போது மாற்றியமைக்க திட்டம்)

- அகில இந்திய வானொலிக்கு எழுதியளித்து ஒலிபரப்பப் பெற்ற நாடகங்கள் 2:

1)உயிருக்கு உயிராக - சமூக நாடகம் (30 மணித்துளி)

2)நந்திவர்மன் - சரித்திர நாடகம் (30 மணித்துளிகள்)

- வானொலியில் நாடகங்களில் நடிப்பது, கதை சொல்வது
- புதுதில்லியில் 11 செய்திகள் வாசித்தது(நேரடிஒலிபரப்பு
- அகில இந்திய வானொலி நிலையத் தமிழ்ப்புத்தாண்டு ஒலிப்பரப்பிற்காக எழுதிய மெல்லிசை பாடல் 1.

திட்டப்பணிகள்::

1) தொல்காப்பியத் துணைவன்
2) திருக்குறள் நோக்கு (ஆய்வு)
3) சங்க இலக்கிய சொல் அடைவு
4) பணி நிறைவைத் தொடர்ந்து சமூகப்பணி

தரவிரும்பும் பிற தகவல்:

1) சுயமுயற்சியில் மலையாளம் கற்றது (யாம் அறிந்த மொழிகளிலே தமிழ் மொழியாவது போல் எங்கும் காணோம் என்னும் பாரதியின் கூற்றை உய்த்துணர எடுத்த முயற்சி)

2) சுயமுயற்சியில் மலையாளம் உருது தட்டச்சு கற்றது. (திருக்குறளின் பெருமையை இந்தியாவில் வாழும் அனைத்து மொழி பிரிவினருக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் நூல் படைக்க எடுத்த முயற்சி.

செய்த-செய்யும் பணிகள்::

1) மத்தியஅரசு அலுவலகர்களுக்குக் கணினிப் பயிற்சி அளித்தல்
2) மத்திய அரசு அலுவலகங்களுக்குரிய மென்பொருள் உருவாக்குதல்
3) புதுதில்லியில் - ஏழை எளியவருக்காக 12 பல் மருத்துவ முகாம் ஒருங்கிணைத்து மக்களுக்கு இலவசச்சேவை வழங்கியமை
4) சென்னையில் - எம்.ஃபில்., பிஎச்.டி. மாணவர்கட்கு ஆய்வில் உதவியமை
5) பணி நிறைவுபெறும் தோழர்களைக் கவிதையுடன் வாழ்த்திப் பேசுதல்

சொற்பொழிவு கேட்டல்:

-வள்ளலார் தொண்டு நிறுவனம், சைதை காரணீஸ்வரர் கோயிலில் நடைபெறும் ஆன்மிகச் சொற்பொழிவு, கலைஞர் நகர் பிள்ளையார் கோயிலில் நடைபெறும் ஆன்மிகச் சொற்பொழிவு, லஸ் கோகலே மன்றத்தில் நடைபெறும் திருமந்திர, திருமுலர் மாநாடு, சித்தர் ஆய்வு மையம், திருக்குறள் கழகங்கள் நடத்தும் கூட்டங்கள், இலக்கிய வட்டக் கூட்டங்கள், பாவேந்தர் பாசறை கூட்டங்கள் மற்றும் வள்ளுவர் கோட்டச் சொற்பொழிவுகள்.

சுற்றுலாப் பயணங்கள்::

1) சிங்கப்பூர், மலேசியா
2) ஜோர்டான், இஸ்ரேல், பாலஸ்தீனம், எகிப்து

உறுதி::

- பழமை போற்றல், புதுமை பாரட்டல், மூத்தவர்களை மதித்தல், மெய்வருத்தக் கூலிதரும் என்னும் வள்ளுவ கருத்தை உணர்ந்து ஆழ்ந்த நம்பிக்கையுடன் தளராது உழைத்தல், தனித்திறமையை வளர்க்கும் உழைப்பில் விரும்பம் கொளல்.

தொடர்புக்கு:: **99402 80288** (***thanjaimpeter59@gmail.com***)

முகவரி : **பேதுரு பதிப்பகம்,**
ஸ்ரீ சக்ர அடுக்ககம், குடியிருப்பு,
17/A கிழக்கு வன்னியர் தெரு,
**கே.கே. நகர் மேற்கு, சென்னை - 600 078.**